தமிழகச் சட்டப் பேரவை

திங்கட்கிழமை, 1967 ஜூன் 26.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப்பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. சி. பா. ஆதித்தனார்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது. கூடியது.

1. வினாக்கள், விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பேரவைக் கூட்டத்தின் முதல் அலுவல் வினாக்கள், விடைகள்''. மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கின்ற வினாக்களுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் பதில் அளிப்பார்கள்.

பெட்ரோலியம்—ரசாயனத் தொழிற்சாலை ஏற்படுத்தல்

*73 **வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் தனியார்த் துறையிலாவது அரசாங்கத் துறையிலாவது பெட்ரோலியம்—இரசாயனத் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) தமிழகத்தில் பெட்ரோலியம்-இரசாயனத் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு தற்போதைக்கு ஏதுமில்லை. ஆயினும், சென்னை எண்ணெய்த் துப்புரவுத் தொழிற்சாலையிலிருந்து Madras Refineries) கிடைக்கும் பெட்ரோலியப் பொருள்களை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு வகையான பொருள்களை உற்பத்தி செய்வதற்குப் பின்வரும் நிறுவனங்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன :—

1). சென்னை உர வங்கிகள் கம்பெனி லிமிடெட், சென்னை. (M/s. Madras Fertilizers Limited).	1 அமோனியா 2 யூரியா. 3 கூட்டு உரங்கள்.	243,000 டன் (ஆண்டிற்கு) 210,000 ,, 360,000 ,,
(2) கே. யு. அத்வானி அண்டு கம்பெனி.	கறுப்பு கார்பன் (Carbon Black)	3 கோடி (30 மில்லியன்) ராத்தல்–ஓராண்டிற்கு.
(3) எஸ். ஆர். நாக்பால், பம்பாய்.	1 டிரான்ஸ்பார்மர் எண்ணெய். 2 சிறப்பு வகை எண்ணெய். (Speciality Oil).	15,000 டன் ஓராண்டிற்கு. 8,000 டன் ஆண்டிற்கு.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: இதைச் சர்க்கார் துறையிலே நடத்துவதற்கு ஏதாவது முறை இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இதிலே இருக்கக் கூடிய விவரப்படி சர்க்காரே ஏற்று நடத்துவதற்கான விவரம் ஒன்றும் இல்லை. மூன்று தனிப்பட்டவர்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

திரு. நா. காசிராமன்: தஞ்சை ஜில்லாவிலே பெட்ரோலியம் இருப்பதாகத் தெரியவருகிறதா? இதைப்பற்றி முடிவு ஏதாவது எடுக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இப்பொழுது விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: சென்னை, தஞ்சை தவிர மற்ற ஜில்லாக்களில் பெட்ரோலியம் இருப்பதாக ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறதா? அப்படியென்றால், ஆராய்ச்சியின் விவரம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இதைப்பற்றிய விவரம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் விவரம் அளிக்கப்படும்.

THIRU T. MARTIN: May I know from the Hon. Minister whether State-wide survey for finding out petrol deposits will be made by the State Government?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: ஏற்கெனவே இதைப் பற்றி சர்வே ஒன்று செய்யப்பட்டது. சில இடங்களில் பெட்ரோலியம் கிடைப்பதாகவும் சில இடங்களில் போதுமான அளவு இல்லையென்றும் விவரம் கிடைத்திருக்கிறது. முழு விவரங்களுக்குத் தனிக் கேள்வி போடவும்.

THIRU R. PONNAPPA NADAR: May I know whether foreign collaboration is available for starting these Petro-Chemical factories?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இதைப்பற்றிய குறிப்பு எதுவும் இல்லை.

திரு. கே. பி. எஸ். மணி: இந்த ஆராய்ச்சி செய்வதிலே மாநில சர்க்காருக்கும் செலவிலே ஏதாவது பங்கு இருக்கிறதா? ஆராய்ச்சி செய்துவிட்டு, பிறகு நம்மிடத்திலே பங்கு கேட்பார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பெட்ரோலியம் கிடைக்கிறதா இல்லையா என்பதைப்பற்றிய ஆராய்ச்சி இந்திய சர்க்கார், மாநில சர்க்கார் இரண்டும் சேர்ந்து செய்து கொண்டிருக்கிறார்கள். அமோனியம் போன்ற உரங்கள் உற்பத்தி செய்வதற்கு குறிப்பிட்ட மூன்று தனியார் நிறுவனங்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

1967 ஜூன் 26]

திரு. வி. கே. கோதண்டராமன்: தனியார்த் துறையிலும் பொதுத் துறையிலும் உற்பத்தி செய்யக்கூடிய ரசாயன உரங்கள் 30 சதவிகிதம் எந்த விலைக்கு வேண்டுமானாலும் விற்பனை செய்து கொள்ளலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதை இந்தச் சர்க்கார் அறியுமா? இதன் விளைவாகக் கள்ள மார்க்கட் அதிகமாக இருக்கிறதே, இதைப் போக்குவதற்கு மத்திய சர்க்காரை இந்த அரசு கேட்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் சொல்லுவதுபோல் இது பரிசீலிக்கக்கூடியது இதைப் பரிசீலனை செய்து சரிப்படுத்த முடியுமானால் சரிப் படுத்தலாம்.

துருவற்ற உருக்குத் தகடு உற்பத்தி

*74 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன்:** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) காட்பாடி அருகே ஸ்டெயின்லஸ் ஸ்டீல் கம்பெனி ஆரம்பிக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(இ) அதற்காக எத்தனை ஏக்கர் நிலம் எப்போது வாங்கப் பட்டது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆண்டிற்கு 7,000 டன் துரு ஏறா உருக்குத்தகடு Stainless Steel Plates உற்பத்தி செய்வதற்காக வட ஆர்க்காடு மாவட்டம் காட்பாடியில் ஒரு தொழிற் கூடத்தை நிறுவுவதற்காக மெஸர்ஸ் சென்னை அலாய் அண்டு ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் லிமிடெட்டுக்கு உரிமம் வழங்கப் பட்டது. அக் கம்பெனியின் தொழில் தலைமை முனைவர் திரு. பாண்டுரங்கையா அவர்கள் திடீரென இறந்ததன் காரணமாக, இத் திட்டம் தடைப்பட்டது. திட்டத்தை நிறைவேற்றுவதற்காக இப்போது முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கு அரசும் இயன்ற உதவியை அளித்து வருகிறது.

(இ) 1963-ம் ஆண்டு 133.36 ஏக்கர் பட்டா நிலங்கள் கைவசப் படுத்தப்பட்டன. 51.61 ஏக்கர் பரப்புள்ள புறம்போக்கு நிலங்கள் 1965-ம் ஆண்டு நவம்பர் திங்களில் கம்பெனியிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

திரு. வி. கே. கோதண்டராமன்: இதற்காகச் சர்க்கார் புறம் போக்கு நிலங்களையும் மற்ற நிலங்களையும் வழங்கிய பிறகும் கூட அது இன்னும் ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறதே? அதை ஆரம்பித்தால் வேலையில்லாமல் இருக்கக்கூடிய குறைந்தது 5 லட்சம் பேர்களுக்கு வேலை கிடைக்கும். ஆகையால் அதை உடனடியாக ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் துரித ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இதற்கு 1963-ம் ஆண்டு ஜூலை திங்களில் உரிமம் வழங்கப்பட்டது. நான் முன்பு கூறியதுபோல், இதற்காக முயற்சி எடுத்துக்கொண்ட